NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu, p2*
**Date:** 7 July 2015

# திரு கோ சோக் டோங்கிற்கு கௌரவ முனைவர் பட்டம்

ஒய்வுபெற்ற கௌரவ மூத்த அமைச்சர் கோ சோங் டோங்கிற்கு சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகம் 'டாக்டர் ஆஃப் லாஸ்' எனும் கௌரவ முனைவர் பட்டத்தை அதன் பட்டமளிப்பு விழாவில் வழங்கிச் சிறப்பித்துள்ளது.

சிங்கப்பூரின் இரண்டாவது பிரதமாராக 1990 முதல் 2004ஆம் ஆண்டுவரை இருந்த அவர், 2011ஆம் ஆண்டு மே மாதம் முதல் கௌரவ மூத்த அமைச்சராகவும் சிங்கப்பூர் நாணய ஆணையத்துக்கு மூத்த ஆலோசகராகவும் பணியாற்றினார்.

திரு கோவுடன் மேலும் இருவருக்கு நேற்று கௌரவ முனைவர் பட்டம் வழங்கப்பட்டது.

கணக்கியல், மக்கள் தொகையியல் ஆகிய துறைகளில் பேராசிரியர் சா சுவீ ஹாக்கின் பங்களிப்புக்கும் அவரது அறக்கொடைப் பணிக்கும் அவருக்கு 'டாக்டர் ஆஃப் லெட்டர்ஸ்' எனும் கௌரவ முனைவர் பட்டம் வழங்கப்பட்டது.



அதிபர் டோனி டான் கெங் யாமிடமிருந்து கௌரவ முனைவர் பட்டம் பெறும் ஒய்வுபெற்ற கௌரவ மூத்த அமைச்சர் கோ சோக் டோங் (இடது). **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

உயிர்மருத்துவத் துறையில் ஆய்வு, சாதனைகளுக்காக சர் ரிச்சர்ட் புரூக் சைகிஸுக்கு அறிவியல் துறையில் கௌரவ முனைவர் பட்டம் வழங்கப்பட்டது.

நேற்று முதல் 14ஆம் தேதி வரை 10,219 பேர் சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகத்தின் இளங்கலைப் பட்டம் பெறவுள்ளனர்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.